Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 113 · திங்கள் Monday · 23.02.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## கூட்டணி பேச்சுவார்த்தையை தொடங்கிய திமுக; ஐ.யூ.எம்.எல் கட்சிக்கு 2 இடங்கள் ஒதுக்க திட்டம்?



சென்னை:

திமுக–ஐ.யூ.எம்.எல் இடையேதொகுதிபங்கிட்டு பேச்சுவார்த்தை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

*2026* சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறுவதையொட்டி அரசியல் கட்சிகள் தங்களின் கூட்டணி பேச்சுவார்த்தையை துவக்கி நடத்தி வருகின்றன. திமுகவை பொருத்தவரை பலம் வாய்ந்த கூட்டணியுடன் தேர்தலை சந்திக்க உள்ளது. திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, தேமுதிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி

உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. திமுகவுடன் இணைந்துள்ள கட்சிகள் தேர்தலில் இரட்டை இலக்க தொகுதிகளை கேட்டு பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் திமுகவின் தொகுதி பங்கிட்டு பேச்சுவார்த்தை குழுவை திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் நேற்று அறிவித்தார். திமுக பொருளாளர் டி.ஆர். பாலு, திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே. என். நேரு, எ.வ.வேலு, நாடாளு மன்ற உறுப்பினர்கள் திருச்சிசிவா, ஆ.ராசா ஆகியோர் அந்த குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்த, தங்கள் கட்சி சார்பாக பேச்சுவார்த்தை குழுவை அமைத்து வருகின்றன. குறிப்பாக, திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சி கடந்த டிசம்பர் மாதமே பேச்சுவார்த்தை குழுவை அமைத்துவிட்டது. மதிமுக, சிபிஎம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளும் பேச்சுவார்த்தைக் குழுவை அறிவித்துள்ளன.

இந்நிலையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் குழுவினர், திமுகவிடம் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று காலை அண்ணா அறிவாலயம் வந்தனர். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன், தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம் முகமது அபுபக்கர், மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ.ஷாஜகான், மாநிலத் துணைத் தலைவர் எம்.அப்துல் ரகுமான் உள்ளிட்டோருடன், டி.ஆர். பாலுதலைமையிலான திமுககுழுவினர்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்நிலையில், முஸ்லீம் லீக் *5* தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் திமுக இரண்டு தொகுதிகளை தர முன்வந்து உள்ளதாகவும் கூறப்படுகிறது. கடந்த தேர்தலில் முஸ்லீம் லீக் *3* இடங்களில் போட்டியிட்ட நிலையில், அனைத்து இடங்களிலுமே அக்கட்சி தோல்வி அடைந்தது. இதனிடையே, பேச்சுவார்த்தைக்கு வந்திருந்த பேராசிரியர் காதர் மொய்தீன், மயக்கமடைந்ததால் அங்கிருந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். இதனிடையே கூட்டணி பேச்சுவார்த்தை தொடர்பாக கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்து கட்சிகளுக்கும் திமுக விரைவில் அழைப்பு விடுக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மார்ச் *8*ஆம் தேதி திமுக மாநில மாநாடு நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்பாக கூட்டணி பேச்சுவார்த்தையை நிறைவு செய்ய திமுக திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## மீரட்டில் இந்தியாவின் அதிவேக மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



புதுடெல்லி: தலைநகர் டெல்லி – மீரட் இடையிலான *82* கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்தியாவின் முதல் நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில்பாதையில் எஞ்சியிருந்த பகுதிகளிலும் பணிகள் நிறைவடைந்த நிலையில் அந்த ரயில் சேவையை பிரதமர் மோடி (பிப்.22) தொடங்கி வைத்தார். இதே போல *23* கிலோமீட்டர் தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள மீரட் மெட்ரோ ரயில் சேவையையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

தற்போது டெல்லி சாராய் கலே கான் முதல் நியூ அசோக் நகர் வரையிலான *5* கிலோமீட்டர் மற்றும் மீரட் தெற்கு முதல் மோதிபுரம் வரையிலான *21* கிலோமீட்டர் பகுதியையும் இந்த நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் இணைக்கிறது.

இதன் மூலம் டெல்லியில் இருந்து மீரட் நகருக்கு ஒரு மணி நேரத்தில் பயணிக்கலாம். இந்த ரயிலின் அதிகபட்சமாக மணிக்கு *160* கிலோமீட்டர் இயக்கப்படும்.

இன்று நடைபெற்ற இந்த தொடக்க விழா நிகழ்வில் பிரதமர் மோடி உடன், உத்தரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் டெல்லி பிராந்திய போக்குவரத்து துறை அதிகாரிகள் இருந்தனர். ஷதாப்தி நகர் முதல் மீரட் தெற்கு வரையில் பிரதமர் மோடி ரயிலில் பயணித்தார். அவருடன் பயணித்த அதிகாரிகள் நமோபாரத் ரயில் திட்டம் குறித்து விரிவான விளக்கம் அளித்தனர். அப்போது சக பயணிகளுடன் பிரதமர் மோடி உரையாடினார்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக காசியாபாத் விமான நிலையம் வந்த பிரதமர் மோடியை, உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் வரவேற்றார். அங்கிருந்து மீரட் சென்று நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் சேவை மற்றும் மீரட் மெட்ரோ சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். தொடர்ந்து ரூ.*12,930* கோடி மதிப்பிலான மக்கள் நலத்திட்ட பணிகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார். பொதுக்கூட்டம் ஒன்றிலும் அவர் பங்கேற்கிறார். நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில்: தலைநகர் டெல்லியில் இருந்து சாஹிபாபாத், காசியாபாத், மோதிநகர், மீரட் உள்ளிட்ட முக்கிய நகரங்களை இணைக்கும் வகையிலும், இந்த பகுதிகளுக்கு இடையிலான பயண நேரத்தை குறைக்கும் நோக்கிலும் நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

மீரட் மெட்ரோ:

இந்தியாவின் அதிவேக மெட்ரோ ரயில் சேவையை மீரட் மெட்ரோ வழங்குகிறது. அதிகபட்சமாக மணிக்கு *130* கிலோமீட்டர் வேகம் வரை மீரட் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இந்தியாவிலேயே நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில், மெட்ரோ ரயில் என இரண்டும் ஒரே தடத்தில் பயணிக்கும் வகையில் மீரட் மெட்ரோ வடிவமைக்கப்பட்டுள்ளது. *23* கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்த மெட்ரோ தடத்தில் *13* ரயில் நிலையங்கள் உள்ளன. *30* நிமிடத்தில் பயண தூரத்தை மீரட் மெட்ரோ ரயில் சேவை நிறைவு செய்கிறது.

## தீவிரவாதிகளை தடுக்க திமுக அரசு செய்தது என்ன? அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி



திருப்பூரில் *6* பயங்கரவாத ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தை முன்வைத்து, தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திமுக அரசை மிகக் கடுமையாகச் சாடியுள்ளார்.

திருப்பூரில் பதுங்கியிருந்த பயங்கரவாதச் சதித்திட்ட கும்பலை டெல்லி போலீசார் அதிரடியாகக் கைது செய்துள்ள சம்பவத்தைத் தொடர்ந்து,தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது 'எக்ஸ்' (X) சமூக வலைதளப் பக்கத்தில் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார். இன்றைய 'ஸ்டாலின் மாடல் அரசு பயங்கரவாதத்தைக் கையாளத் தெரியாமல் திணறுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி தனது பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது, கொலை, கொள்ளை என்பதையெல்லாம் தாண்டி,தற்போது தீவிரவாதத் தாக்குதல் எனும் கொடூர உச்சத்திற்குத் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை இன்றைய விடியா திமுக அரசு சீர்குலைத்து வைத்திருக்கிறது.

திருப்பூரில் *6* பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது என அவர் பதிவிட்டுள்ளார். கடந்த *2022*–ல் கோவை யில் கார் குண்டுவெடிப்பு நிகழ்ந்த போது, தீவிரவாத அச்சுறுத்தல் என்று ஒப்புக்கொள்ளாமல், வெறும் "சிலிண்டர் வெடிப்பு" எனச் சமாளிக்கவே திமுக அரசு முயன்றது. அப்போதே விழிப்புடன் இருந்திருந்தால் இன்று நிலைமை இவ்வளவு மோசமாகியிருக்காது என அவர் சாடியுள்ளார். "டெல்லி போலீசார் வந்து கைது செய்யும் வரை இங்குள்ள திமுக அரசின் பயங்கரவாத எதிர்ப்புப் படை (ATS – Anti Terrorism Squad) என்ன செய்துகொண்டிருந்தது? மத்திய அரசின் NIA போன்ற அமைப்புகளே தொடர்ந்து பயங்கரவாதிகளைக் கைது செய்து வரும் நிலையில், மாநில அரசு இதனைத் தடுக்கத் தவறியது ஏன்?" என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த கையாலாகாத ஸ்டாலின் மாடல் ஆட்சியைத் தொடர விட்டால், *1998*–ல் கோவையில் நடந்ததைப் போன்ற ஒரு கோரச் சம்பவத்திற்கு மீண்டும் வழிவகுத்துவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே எழுந்துள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

தமிழகத்தின் அமைதி நிலை திரும்ப, இந்த மக்கள் விரோத திமுக ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டும் எனத் தெரிவித்து உள்ள எடப்பாடி பழனிசாமி, #மக்களைக்_காப்போம் மற்றும் #தமிழகத்தை_மீட்போம் ஆகிய ஹேஷ்டேக்குகளுடன் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். தேர்தலுக்குச் சில காலமே உள்ள நிலையில்,பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்த இத்தகைய அரசியல் மோதல் தமிழகத்தில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt






கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை மற்றும் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத்தினருக்கு இடையேயான நட்புறவு வாலிபால் போட்டி, மாவட்ட விளையாட்டு அரங்கில் உற்சாகமான சூழலில் நடைபெற்றது. இந்த போட்டியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின், மற்றும் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்க தலைவர் திரு. அசோக் தர்மராஜ் ஆகியோர் துவக்கி வைத்து வீரர்களை வாழ்த்தினர். இந்த நட்புறவு போட்டி, காவல்துறை மற்றும் வழக்கறிஞர்கள் இடையேயான நல்லிணக்கம், பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது.



# திருப்புத்தூர் நீதிமன்றத்தில் கூடுதலாக சார்பு நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் வேண்டி ஆர்ப்பாட்டம்

சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூரில் உள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் முன்பு வழக்கறிஞர்கள் மற்றும் அனைத்து கட்சிகள் கலந்து கொண்டு திருப்புத்தூர் நீதிமன்ற பார் அசோசியேசன் தலைவர் வழக்கறிஞர் கணேசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்புத்தூர் நீதிமன்றத்தில் கூடுதலாகசார்பு நீதிமன்றமற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் வேண்டி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டம் அட்வகேட் அசோசியேஷன் தலைவர் பி.ஆர். ரவீந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். பார் அசோசியேஷன் செயலாளர் சையது முகமது இப்ராஹிம், அட்வகேட் அசோசியேசன் செயலாளர் வழக்கறிஞர் அருள் தீபக் மனோரஞ்சன் ஆகியோர் நிகழ்வினை தொகுத்து வழங்கினர்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. கே. உமாதேவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் முருகேசன்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலாளர் காளிமுத்து, மனித நேய மக்கள் கட்சி ராஜா, எகியா, வரிசை முகமது, பாஜக முத்துப்பாண்டி, மதிமுக ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் ராஜ்மோகன், மூத்த வழக்கறிஞர் பழனிச்சாமி, வழக்கறிஞர் முருகேசன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பார் அசோசியேசன் பொருளாளர் வழக்கறிஞர் முகமது ஷெரிப் நன்றியுரை நிகழ்த்தினார்.




வெல்லும் தமிழ்ப்பெண்கள் வீடு வீடாக பரப்புரை சம்மந்தமாக கழகத்தின் துணை பொதுசெயலாளரும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினருமான அக்கா திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்களை தூத்துக்குடி இல்லத்தில் சந்தித்து வாழ்த்துகள் பெற்றபோது எடுத்த படம்.



கேரளா டெல்லி மிருகக்காட்சி சாலையில் இருந்து திருவனந்தபுரம் மிருகக் காட்சி சாலைக்கு 2014ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 'மலர்' என்ற வெள்ளை பெண் புலி,வயது மூப்பு காரணமாக (17வயது) பல்வேறு நோய்களால் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று உயிரிழந்தது. இதையடுத்துபிரேதபரிசோதனைக்குபிறகுஅந்தபுலியை அதிகாரிகள் நேற்று மாலையில் தகனம் செய்தனர்.

# அச்சிறுப்பாக்கம் அருகே முருங்கை கிராமத்தில் நாகாத்தம்மன் ஆலய நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த முருங்கை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஆலய நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழாவெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த கும்பாபிஷேக விழாவானது கடந்த வெள்ளிக்கிழமை விக்னேஸ்வர பூஜை கணபதி பூஜை நவகிரக ஹோமமம் உள்ளிட்ட பூஜைகளுடன் கும்பாபிஷேக விழாவானது தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து நான்காம் கால யாகசாலை பூஜை பூர்ணா ஹூதி உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் செய்யப்பட்டு புனித நீர் யாகசாலையில் இருந்து சிவாச்சாரியா ர்கள் கோவில் உட்பிரகாரம் வளம் வந்து கோபுர கலசத்திற்கு புனித நீர் எடுத்துச் செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் சிவாச்சாரி யார்கள் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து கோவில் உட்பிரகாரத்தில் உள்ள நாகாத்தம்மன் சுவாமிக்கும் புனித நீர் ஊற்றிமகாகும்பாபிஷேக விழா நடைபெற்றது இந்த கும்பாபிஷேக விழாவில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# தூத்துக்குடியில் முத்துக்குளித்துறை பரதர் நலசங்கம் சார்பில் எழுச்சி மாநாடு; பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தூத்துக்குடி முத்துக்குளித்துறை பரதர் நலச்சங்கத்தின் எழுச்சி உள்ளரங்கு மாநாடு தூத்துக்குடியில் உள்ள பனிமய மாதா பேராலயம் அருகே தனியார் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. சங்க தலைவர் கனகராஜ் பர்னாந்து, பொதுச் செயலாளர் ராஜி பர்னாந்து, பொருளாளர் மிக்கேல் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.




கூட்டத்தில் சங்க அவைத்தலைவர்ஜாண்சன் தல்மேதா, சங்க தலைவர் கனகராஜ் பர்னாந்து, பொதுச் செயலாளர் ராஜி பர்னாந்து, பொருளாளர் மிக்கேல் தலைமை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பாத்திமாநகர் பங்குதந்தை ஜேசுதாஸ், தமிழக வெற்றி கழக தெற்கு மாவட்ட செயலாளர் பிரைட்டர், தமிழக மீனவ மக்கள் கட்சி நிறுவன தலைவர் கோல்டன் பரதர், பாண்டியபதி பரதர் நலசங்க செயலாளர் இன்னாசி மற்றும் பலர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை விரிவாக எடுத்துரைத்தனர்.

இந்த மாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.- அதன் விபரம் வருமாறு

தூத்துக்குடி, திருச்செந்தூர், ராதாபுரம், குளச்சல், கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் எமது சமுதாய மக்களுக்கு தாங்கள் சார்ந்த கட்சியில் அவர்கள் கேட்கும் சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட அனுமதிக்க வேண்டும்,

பரத சமுதாய மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் நமது சமுதாய மக்களுக்கு அரசியல் அங்கிகாரம் கிடைப்பதற்கு அவரவர் பயணிக்கின்ற கட்சியில் மீனவர் அணி சார்ந்த பொறுப்புகள் வழங்கப்படுவது ஏற்புடையதல்ல. எனவே எங்களுக்கு மாநில, மாவட்ட, நகர பொறுப்புகள் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் இலங்கை கடற்படையால் தொழில் பாதிப்பால் பொருளாதாரமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு பெரும் இன்னலுக்கு ஆளாகும் நிலையில் இதை கருத்தில் கொண்டு மாநில, மத்திய அரசு எம் குல (இராமநாதபுரம்) மாவட்ட மீனவர்களை பாதுகாக்கவேண்டும் என்றும் இப்பிரச்சனைக்கு நிரந்த தீர்வு காண தமிழக அரசை வலியுறுத்தியும்

தொழிலாளர் நலவாரிய மருத்துவமனை (இஸ்ஐ)யில் மீனவ மக்களுக்கு சிகிச்சை பெறுவதற்கு வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கி சூடு சம்பவத்தை விசாரிக்க தமிழக அரசால் அமைத்த நீதியரசர் அருணா ஜெகதீசன் தீர்ப்பை அரசு முழுமையாக அமல்படுத்திட வேண்டும்,

புனித வெள்ளியன்று மறைமாவட்டம் சார்பில் கடந்த நான்கு ஆண்டுகளாக மதுக்கடைகளை மூட வேண்டும் என்று வலியுறுத்தபட்டு வருகிறது அதற்காக உண்ணா நோன்பு முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகிறது. எனவே இதை கருத்தில் கொண்டு 03.04.2016 புனித வெள்ளி அன்று மதுக்கடைகளை மூட வேண்டும் என அரசை வற்புறுத்தி கேட்டுக்கொண்டும், தமிழக அரசால் மீனவ மக்களுக்கு மீனவர் சங்கத்தின் மூலம் நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது ஆனால் இச்சலுகைகள் மீனவர் அல்லாத பிற சமூகத்தாரும் போலி ஆவணங்கள் மூலம் பயனடைந்து வருவதால் உண்மையான மீனவர்களுக்கு சலுகை மறுக்கப்படுகிறது இதன் உண்மை தன்மையை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்

எமது பரத குல சமுதாயத்தை சார்ந்த ஆழ்வார் திருநகரியை சேர்ந்த லிமிட்டன் என்பவர் கடந்த 2023 டிசம்பர் 18,19 ஆம் தேதியில் பெரும் மழை வெள்ளத்தால் பல உயிர்களை காப்பாற்றினார். இதனால் அவருக்கு தமிழக ஆளுநர் சிறப்பு சான்றிதழ் வழங்கினார். ஆனால் சங்கத்தின் சார்பில் கடிதங்கள் வழங்கியும் இதுவரை தமிழக அரசு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே லிமிட்டனுக்கு தமிழக அரசு சிறப்பு சான்றிதழ் வழங்க வலியுறுத்தி மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் மீனவ சமுதாய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பல கலந்து கொண்டனர்.

# கிரைம் கண்ட்ரோல் சமிதி ஆண்டு அறிக்கை தாக்கல்: தமிழக தலைவர் ஏ.அக்பர் அலி புதுடெல்லி பயணம்




கிரைம் கண்ட்ரோல் சமிதியின் 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையைத் தாக்கல் செய்யவும், புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காகவும் தமிழகத் தலைவர் ஏ. அக்பர் அலி புதுடெல்லி விரைகிறார். சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த முக்கிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க உள்ள இந்தச் சந்திப்பு, நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் அமைய உள்ளது. இவருடன் மாநிலச்செயலாளர் பூங்குன்றன் உடன் செல்கிறார். இது தமிழ்நாட்டில் சமித்தியின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய நகர்வாகக் கருதப்படுகிறது.

# தூத்துக்குடியில் பாஜக இளைஞரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி இளைஞர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் டூவிபுரத்தில் நடைபெற்றது.




பாஜக இளைஞர் அணி மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் போதை இல்லா தமிழகம் வேண்டும்", "இளைஞர்களை காப்பாற்று", "திமுக அரசு பொறுப்பு ஏற்று பதவி விலகு" என கோஷங்கள் எழுப்பினர்.

தமிழகத்தில் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள்பயன்பாடு அதிகரித்து வருவதாக குற்றம் சாட்டி, அதனை கட்டுப்படுத்தத் தவறியதாக கூறி திமுக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத்தலைவர் சத்தியசீலன் பேசுகையில்: தமிழகத்தின் எதிர்காலம் இளைஞர்கள். ஆனால் இன்று அவர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னேற வேண்டிய நிலையில், போதைப்பொருள் வலையில் சிக்கிக் கொள்வது மிகுந்த கவலைக்குரியது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே போதைப்பொருள் பரவுவது சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்ததற்கான சாட்சி. இது திமுக அரசின் நிர்வாகத் தோல்வி மட்டுமல்ல, இளைஞர் எதிர்காலத்தையே ஆபத்துக்குள்ளாக்கும் நிலையில் உள்ளனர் என்று குற்றம் சாட்டினார். மேலும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விநியோகம் குறித்து தொடர்ந்து செய்திகள் வெளியாகியும், அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. குற்றவாளிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக செயல்படுவது ஏன்?

இளைஞர்களை காப்பாற்றுவதற்காக சிறப்பு கண்காணிப்பு படை அமைத்து, பள்ளி-கல்லூரி பகுதிகளில் தீவிர சோதனை நடத்த வேண்டும். இல்லையெனில் மாநிலம் முழுவதும் மக்கள் போராட்டம் வெடிக்கும். திமுக அரசு விழித்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத்தலைவர் கே.கோபால்சாமி, எஸ்.எம்.எல்.ஏ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொது செயலாளர் ராஜேஷ், மாவட்டத் துணைத் தலைவர் சண்முகசுந்தரம், மாநில செயற்குழு உறுப்பினர் விவேகம் ரமேஷ், ஏ.என். ஆர். ராஜா, கண்ணன், ரவிசந்திரன் மற்றும் அணி பிரிவு தலைவர்கள் வெள்ளத்தாய், ஜெயக்குமார், சின்னதங்கம், மணிகண்டன், பாலாஜி, அமல்ராஜ் மற்றும் வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு திட்ட மருத்துவ முகாம்

## சிறப்பாக பணிபுரிந்து சேவையாற்றிமைக்காக பாராட்டுச்சான்றிதழ்களை கலெக்டர் கந்தசாமி வழங்கினார்



ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு திட்ட மருத்துவ முகாமில் சிறப்பாக பணிபுரிந்து சேவையாற்றிமைக்காக பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இம்முகாமானது 14.02.2026 வரை சிறப்பாக நடைபெற்று முடிந்தது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் இதுவரையில் 45 மருத்துவ முகாம்கள் நடைபெற்றது. இம்மருத்துவ முகாம்களில் 21 வகையான மருத்துவ பரிசோதனைகளும், பொது மருத்துவம், (ஆண் மற்றும் பெண்), காது முக்கு மற்றும் தொண்டை, கண், எலும்பு, நரம்பியல், மனநலம் மருத்துவம் தோல் மருத்துவம், நீரழிவு நோய், இதயவியல், மர்ப்க புற்றுநோய் உட்பட பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்பட்டது. இம்மருத்துவ முகாம்களில் சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் கண் பரிசோதனை. பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்பப்பைவாய் புற்றுநோய். மார்பகபுற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO மற்றும் SCAN போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை இம்முகாம்களில் 59.082 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மேலும், 10,130 நபர்களுக்கு உயர் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் சிறப்பு மருத்துவ முகாம்கள் ஈரோடு மாவட்டத்தில் சிறப்பாக நடத்தி முடிந்ததற்காக செயல்பட்ட மருத்துவப்பணியாளர்களுக்கும். மருத்துவத்துறைய இம்முகாம்களில் சிறப்பாக சார்ந்தவர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

இவ்விழாவில், பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துமனை முதல்வர் மரு.ரவிக்குமார். இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.ஜெயந்தி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தேர்தல் வந்துவிட்டதால் வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை ஆகியவற்றை பாஜக பயன்படுத்திவிடுவார்கள்

## தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பேட்டி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்வில்,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறைசார்பில்76பயனாளிகளுக்கு ரூ. 77.36 லட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாகனங்களைதிமுகதுணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி பேசுகையில்: தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வேலூர் மக்களை இன்னும் சந்திக்க வேண்டி உள்ளது. இதனைத் தொடர்ந்து விரைவில் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும். ஓபிஎஸ் தொடர்பான அறிவிப்பு ஏதும் இருந்தால் அதை முதல்வர் வெளியிடுவார்.

கூட்டணி கட்சிகளுடன் பேச்சு வார்த்தை எப்பொழுதுமே சுமூகமாகத்தான் இருந்திருக்கிறது. ஏனென்றால் நீண்ட நாளாக இருக்கக்கூடிய உறவு. அதோடு கொள்கைக்காக உருவாகி இருக்கக்கூடிய கூட்டணி இந்த கூட்டணி. அதனால் நிச்சயமாக எந்த பிரச்சினையும் இல்லாமல் நடக்கும்.

அமைச்சர் கே.என். நேரு குறித்த கேள்விக்கு, தேர்தல் வந்துவிட்டால் பாஜக"ICE" என்று பயன்படுத்த ஆரம்பித்து விடுவார்கள். வருமான வரித்துறை, சிபிஐ, அமலாக்கத்துறை ஆகியவற்றை பயன்படுத்திவிடுவார்கள். அதே வேலையை தமிழ்நாட்டிலும் தொடங்கியுள்ளனர் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பி.கீதா ஜீவன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில்

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது இந்த ஆலோசனைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக நாடார் சமுதாயத்தின் முதல் சட்டமன்ற உறுப்பினர் சௌந்திர பாண்டியனார் அவர்களின் 73 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவருடைய திருவுருவப்படத்திற்கு நிர்வாகிகள் அனைவரும் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர் இதனை தொடர்ந்து தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் புதிய கொடிதனை அறிமுகம் செய்து வைத்து பேசினார். தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் புதிய கொடி புளு பச்சை கலரிலும் கொடியின் மத்தியில் நம்முடைய அடையாளத்தையும் பதிவு செய்திருக்கிறோம்புளுபச்சை கலரை நாம் எதற்காக உருவாக்கி இருக்கிறோம் என்றால் மாவீரன் கராத்தே செல்வின் நாடார் அவர்களால் இந்த கலர் அறிமுகப்படுத்தப்பட்டது மேலும் இந்த கலரின் அர்த்தம் என்னவென்றால் வானத்தையும் பூமியையும் ஆண்ட சமுதாயம் இந்த நாடார் சமுதாயம் வானத்தில் ஆண்டு கொண்டிருப்பவர்கள் அகத்தியர் நம்மாழ்வார் வைகுண்டர் சேர்மன் அருணாசல சுவாமி போன்ற இறையடியார்கள் வானத்தை ஆளுகின்றார்கள்நாம்பூமியை ஆண்டு கொண்டு இருக்கின்றோம் என்பதின் அடையாளமாக வானம் புளூவாகவும் பூமியை பச்சையாகவும் மையமாகவைத்து இந்தகொடி உருவாக்கப்பட்டு இருக்கிறது இந்த கொடியை சென்னையில் திரைப்பட சண்டை பயிற்சி இயக்குனர் கலைமாமணி டாக்டர் ஜாகுவார் தங்கம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள் என்றார் மேலும் சௌந்தரபாண்டியனார் நம்முடைய சமுதாய மக்கள் வசிக்கின்ற எல்லா ஊர்களுக்கும் கிராமம் கிராமமாக சென்று சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் அவருடைய நினைவு நாளாகிய இன்று நாமும் நம்முடைய சமுதாய மக்கள் வாழுகின்ற ஊர்களுக்குச் சென்று சமுதாயத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம் என்று பேசினார் இந்த நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன் தென்காசி கிழக்கு மாவட்ட செயலாளர் கண்ணன்ராஜ் கடையநல்லூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன் ஒன்றிய இளைஞரணி செயலாளர் சுந்தர் துணைச் செயலாளர் சீனிவாசன் மற்றும் நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.



நாமக்கல் மாவட்டத்தில் சிகான் முனியப்பன் தலைமையில் சோபுகாய் கராத்தே பெல்ட் தேர்வு நடைபெற்றது. இதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஈரோடு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கராத்தே டோ அசோசியேசன் செயலாளர் சிகான் எம்.குமார் மற்றும் துணைத் தலைவர் சிகான் தனபால் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்று பெல்ட் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினர்.



அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்(22.02.2026) மதுரை மாவட்டம், எல்லீஸ் நகர் மாணிக்கம் மகாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழாவை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து வளைகாப்பு சீர்வரிசைகள் வழங்கினார்.



தேனி மாவட்ட பா ஜ க இளைஞரணி மற்றும் தேசிய திறனாய்வு கூட்டணி சார்பாக தமிழகத்தில் தலை தூக்கும் போதை பொருள் வழக்கத்தை கட்டுப்படுத்த முடியாத திமுக அரசின் செயலின்மைக்கு எதிராக தமிழகம் முழுவதும் மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் தேனி பழைய பேருந்து நிலையத்தில் மாவட்ட இளைஞர் அணி தலைவர் விஜய் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நகரத் தலைவர் ரவிக்குமார் முன்னிலை வகித்தார். சிறப்புரை கனகராஜ் மாநில செயற்குழு உறுப்பினர் தேனி மாவட்ட தலைவர் ராஜபாண்டி, மற்றும் பிசி பாண்டி பாரதிய கட்சி இளைஞர் அணி அனைத்து நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் மாவட்ட இளைஞரணி பொதுச் செயலாளர் முனியாண்டி நன்றி உரை நிகழ்த்தினார்.



விடுதலை சிறுத்தை கட்சியின் சார்பாக விருத்தாச்சலம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் வீர திராவிட மணி தலைமையில் நடைபெற்ற புதிய நிர்வாகி அறிமுக செயற்கூட்டம் நடைபெற்றது ஊடக மையம் மாவட்டத்துணைச்செயலாளர் யா.முனுசாமி டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலையை நினைவு பரிசாக வாங்கினார் உடன் ஒன்றிய துணை செயலாளர் போத்தனூர் சுரேஷ் நவீன் மளிகை மேடு மணிகண்டன் கீழக்குறிச்சி முகாம் செயலாளர் மாயகிருஷ்ணன் தமிழ்ச்செல்வன் என்கின்ற சூர்யா உடன் இருந்தனர்

# அதிமுக கூட்டணிக்கு ஆதரவு: ஈரோட்டில் நடைபெற்ற கொங்கு மக்கள் முன்னணி செயற்குழு கூட்டத்தில் அதிரடி தீர்மானங்கள்



கொங்கு மக்கள் முன்னணியின் மாநில செயற்குழு கூட்டம் ஈரோடு, சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் உள்ள தனியார் அரங்கத்தில் நடைபெற்றது. மாநிலதலைமைஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழகஅரசியல் சூழல் மற்றும் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. தமிழகத்தில்சாதிவாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என 2021-ம் ஆண்டு தேர்தல் வாக்குறுதி அளித்துவிட்டு, அதனை இதுவரை நிறைவேற்றாமல் தமிழக மக்களை ஏமாற்றி வரும் திமுக அரசுக்கு இக்கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அதே போல், தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பரவலையும், தொடர்ந்து அரங்கேறி வரும் கொலை, கொள்ளை மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்தத் தவறிய திராவிட மாடல் அரசை இக்கூட்டம் கண்டிப்பதோடு, சட்டம்ஒழுங்கைநிலைநாட்ட வலியுறுத்துகிறது. வரும் 2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் அதிமுக கூட்டணியை முழுமையாக ஆதரிப்பதெனவும், அக்கூட்டணியில் கொங்கு மக்கள் முன்னணிக்கு உரிய தொகுதிகளை ஒதுக்கீடு செய்து தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், கூலி உயர்வுக்காகத் தொடர்ந்து போராடி வரும் கறிக்கோழி வளர்ப்பு பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளைத்தமிழகஅரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நிர்வாக வசதிக்காகப் பழனியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட5முக்கியதீர்மானங்கள் இக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற இந்திய குடியரசு துணைத் தலைவர் சிபி.ராதாகிருஷ்ணன் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்தார். அவரின் வருகையையொட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் கா. பொற்கொடி, மலர்கொத்து வழங்கி வரவேற்றார். அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் குடியரசு துணைத் தலைவர் பங்கேற்றார். இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கராத்தே டோ அசோசியேஷன் செயற்குழு கூட்டம்

## புதிய நிர்வாகிகள் நியமனம் மற்றும் வீரர்களுக்கு பெல்ட் வழங்கும் விழா



ஈரோட்டில் உள்ள தனியார் உணவகத்தில் ஈரோடு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கராத்தே டோ அசோசியேஷனின் முக்கியச் செயற்குழு கூட்டம் சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.சக்திவேல் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ்நாடுஸ்போர்ட்ஸ்கராத்தேடோஅசோசியேஷன் பொருளாளர் மகேந்திரன் முன்னிலை வகித்துச் சிறப்பித்தார். சிறப்பு அழைப்பாளராக மாநிலச் செயலாளர் அல்தாப் ஆலம் கலந்துகொண்டு, சங்கத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிப் பணிகள் மற்றும் மாவட்டத்தில் கராத்தே கலையை மேம்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்தில், எஸ்.ஜி.எ:ப்.ஐ விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று அடுத்தகட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெறும் மாணவ-மாணவியருக்கு ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், சங்கத்தின் புதிய பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தின் நிறைவாக, ஈரோடு மாவட்டச் செயலாளர் குமார் நன்றி உரையாற்றி, மாநிலச் செயலாளருக்கு வீரத்தைப் பறைசாற்றும் வகையில் வீரவாள் வழங்கி கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து, கராத்தே தேர்வுகளில்கலந்துகொண்டுதங்களதுதிறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு பெல்ட் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு உற்சாகமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கத்தின் நிர்வாகிகள், பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் அவர்களின் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர்.தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் டாக்டர் ஜேகேகே முனிராஜா தொழில் பயிற்சி நிலையத்தின் துணை முதல்வர் P ஈஸ்வரன் அவர்களின் நீண்ட கால பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சிறப்பு விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

# ரூ.18 கோடி மதிப்பீட்டில் திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் 207 அடி உயர முருகன் சிலை

## அமைச்சர்கள் சு.முத்துசாமி மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் அடிக்கல்நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தனர்







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (22.02.2026) ஈரோடு மாவட்டம், திண்டல், அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தனர். பின்னர் இத்திருக்கோயிலில் ரூ. 18 கோடி மதிப்பீட்டில் 207 அடி உயர முருகன் சிலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினர். அதனைத்தொடர்ந்துமொடக்குறிச்சி வட்டம், புஞ்சைலக்காபுரம்அருள்மிகு செண்பகமலை குமாரசாமி திருக்கோயிலில் ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தனர். ஈரோடு மாவட்டம், திண்டலில் அமைந்துள்ள அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயிலானது 100 ஆண்டுகளுக்கும் முற்பட்ட பிரசித்திப் பெற்ற முருகன் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற நிலையில், ரூ. 5 கோடி செலவில் புதிதாக ஐந்து நிலை இராஜகோபுரம். மலைக்கு செல்ல படிவழிப் பாதை, சிவன், அம்மன், விநாயகர்,பைரவர்,பாலமுருகன் உள்ளிட்ட சன்னதிகள் மற்றும் நுழைவாயில் போன்றவை அமைக்கப்பட்டு நேற்று திருக்கோயில் இராஜகோபுரம் மற்றும் அனைத்து சன்னதிகளுக்கும் குடமுழுக்கு நடைபெற்றன.

அமைச்சர் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் திண்டல், அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயில்குடமுழுக்கு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு, இத்திருக்கோயிலில் ரூ. 18 கோடி மதிப்பீட்டில் 207 அடி உயர முருகன் சிலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தனர்.அதனைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள் மொடக்குறிச்சி வட்டம்,புஞ்சைலக்காபுரம் அருள்மிகுசெண்பகமலை குமாரசாமி திருக்கோயிலில் சட்டமன்ற அறிவிப்பின்படி, திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தினந்தோறும் 25 பக்தர்களுக்கு ஒருவேளை உணவளிக்கும் வகையில் அன்னதானத் திட்டத்தையும் தொடங்கி வைத்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 14 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும். 770 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டொன்றிற்கு 3.65 கோடி பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை இரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாச்சலம், ஈரோடு மண்டல இணை ஆணையர் ஏ.டி. பரஞ்சோதி, துணை ஆணையர்கள் எஸ்.வி. ஹர்சினி, டி. நந்தகுமார், உதவி ஆணையர்கள் ஆர். சுகுமார், அருண்குமார், ஆர். சந்திரன், செல்லத்துரை,உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மத்திய–மாநில இணக்கம் வளர்ச்சிக்கு அவசியம் சிவகங்கையில் துணைஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பேட்டி

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே திருக்கோஷ்டியூரில் அமைந்துள்ள ஸ்ரீ சௌமிய நாராயண பெருமாள் திருக்கோயிலில் துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் சுவாமி தரிசனம்செய்தார்.தொடர்ந்து, சிவகங்கை அரண்மனை வாசல் முன்புள்ள வேலுநாச்சியாரின் திருவுருவச்சிலைக்குதுணை ஜனாதிபதி CP ராதாகிருஷ்ணன் மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போது,

மத்திய மற்றும் மாநில அரசுகளின் இணக்கம் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, மத்திய– மாநிலம் என இரு அரசுகளும் ஒருங்கிணைந்துசெயல்படுவது அப்பகுதியின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்றார். தொடர்ந்து,

அமெரிக்கஅதிபர் Donald Trump இந்தியாவுக்கு கூடுதல் இறக்குமதி வரி விதித்துள்ளது குறித்தகேள்விக்கு "முதலில் 50% என அதிக சதவீத வரி அறிவிக்கப்பட்டிருந்தாலும், பின்னர் அது 18% மாக குறைக்கப்பட்டு ள்ளது. இது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்," என துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

# மானாமதுரை பாபா மெட்ரிக்பள்ளியின் 47வது ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியின் 47வது ஆண்டு விழா சனிக்கிழமை மாலை பள்ளிவளாகத்தில் நிறுவனர் பி, ராஜேஸ்வரி தலைமையிலும், தாளாளர் ஆர். கபிலன், ஆட்சியர் ஆர்.மீனாட்சி மற்றும் முதல்வர் எம். சாரதா ஆகியோர் முன்னிலையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

காலை 9:00 மணி முதல் 1:00 மணி வரை எல்கேஜி முதல் இரண்டாம் வகுப்பு வரையிலான குழந்தைகளின் நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக காவல் ஆய்வாளர் குமரவேல் பாண்டியன், பிரதான விருந்தினராக போக்குவரத்து காவல் ஆய்வாளர் வெங்கடேஷ், கௌரவ விருந்தினர்களாக காவல் சார்பு ஆய்வாளர்தங்கமணி,போக்குவரத்து காவல்துறை நிறைய அலுவலர் ரமேஷ், வெள்ளிக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அருண்மொழி, மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி உரையாற்றினர்.

மேலும் இதில் மூன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் ஜெஃபி கிரவ்ஜா, பிரதான விருந்தினராக சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் கண்ணன், கௌரவ விருந்தினர்களாக மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார், கச்சாத்தநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை கலையரசி, திருப்புவனம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை இந்திரா, பிஆர்ஒய்டி மூத்த மேலாளர் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி உரையாற்றினர். நடைபெற்ற இந்த ஆண்டு விழாவில் ஆண்டுஅறிக்கைசமர்ப்பிக்கப்பட்டு, 2025–26 ஆம் கல்வியாண்டில் அனைத்து நிலை வகுப்புகளிலும் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக 100% வருகை பதிவு கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பெற்றோர்களுக்கு பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டது. சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குழந்தைகள், மாணவ, மாணவிகளின் ஆடல், பாடல், நாடகம் மற்றும் நடன கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பள்ளி குழந்தைகள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரிய பெருமக்கள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடுகளை துணை முதல்வர் ஆபிரகாம் மற்றும் ஆசிரியபெருமக்கள் மேற்கொண்டனர்.

# விசைத்தறி தொழிலுக்கான ஜிஎஸ்டி நடைமுறை சிக்கல்கள்: சட்டமன்ற வளாகத்தில் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசிடம் விசைத்தறியாளர்கள் கூட்டமைப்பு கோரிக்கைமனு





விசைத்தறி தொழில் செய்பவர்கள், குறிப்பாகப் பாவு நூல் வாங்கி ஜாப் ஒர்க் முறையில் துணி உற்பத்தி செய்பவர்களுக்கு ஜிஎஸ்டி துறையிடமிருந்து அண்மைக்காலமாகப் புதிய நடைமுறைகள் மற்றும் நோட்டீஸ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் பாவு மற்றும் ஊடை நூல்களின் தோராய மதிப்பு, உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு ஆகியவற்றை நான்கு மாதத்திற்கு ஒருமுறை ஐடிசி என்றதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்ற நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், 2018 முதல் இந்த நடைமுறையை ஏன் பின்பற்றவில்லை எனக் கேட்டு அபராதத்துடன் கூடிய நோட்டீஸ்கள் வழங்கப்பட்டு வருவது விசைத்தறி உரிமையாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது குறித்து தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள், ஈரோடு ஜிஎஸ்டி ஜாயிண்ட் கமிஷனரை சந்தித்து, தற்போதைய தொழில் சூழலில் இத்தகைய நடைமுறைகள் சாத்தியமற்றது என்றும், இது தொழிலைவிட்டுவெளியேறும் நிலையை உருவாக்கும்என்றும்விளக்கினர்.

இதனைத் தொடர்ந்து, கடந்த செவ்வாய்க்கிழமை (17.02.2026) தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் சென்னை சட்டமன்ற வளாகத்தில், திருச்செங்கோடு எம்.எல்.ஏ ஈ.ஆர்.ஈஸ்வரனைச் சந்தித்து இந்த இக்கட்டான சூழலை விவரித்தனர்.மேலும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி தொடர்பு துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களிடமும் கோரிக்கைவைத்ததை அடுத்து

அன்றைய தினமே சட்டமன்றத்தில் இந்தச் சிக்கல் குறித்து திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன் வலுவாக குரல் எழுப்பினார். இதனைத் தொடர்ந்து, செய்தித் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கைத்தறித் துறை அமைச்சர் காந்தி ஆகியோரின் முன்னிலையில், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் கூட்டமைப்பு நிர்வாகிகள் விரிவான விளக்கம் அளித்தனர்.

பாதிப்புகளைக் கேட்டறிந்த நிதி அமைச்சர், உடனடியாக வணிகவரித் துறை ஆணையரிடம் இது குறித்துப் பேசுவதாக உறுதியளித்தார்.

அதன் தொடர்ச்சியாக (20.02.2026) வணிகவரித் துறைஆணையரைச் சந்தித்த கூட்டமைப்பு நிர்வாகிகளிடம், நிதி அமைச்சர் ஏற்கனவே இது குறித்துத் தகவல் தெரிவித்துள்ளதை ஆணையர் உறுதிப்படுத்தினார் என்பது தகவல்.

மேலும், விசைத்தறி உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சிரமங்களைப் பரிசீலித்து, உரிய விலக்கு அளிக்கத் தேவையான செயல்பாடுகளை எடுப்பதாக ஆணையர் உறுதியளித்தார்எனக்கூறப்படுகிறது.

தங்களது கோரிக்கையை ஏற்று சட்டமன்றத்தில் குரல் கொடுத்த ஈ.ஆர். ஈஸ்வரன் எம்.எல்.ஏ–விற்கும், உறுதுணையாக இருந்த அமைச்சர்களுக்கும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பினர் தங்களது நன்றியினைத்தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# மானாமதுரை ஸ்ரீ ஆனந்தவல்லி சோமநாத சுவாமி திருக்கோயில் புதிய வைரத்திருத்தேர் வெள்ளோட்ட பெருவிழா



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ஸ்ரீமத் முத்துவிஜய ரகுநாத கௌரி வல்லப மேதகு ராணி மதுராந்தகி நாச்சியார் அவர்களின் நிர்வாகத்திற்குட்பட்ட சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பா ஸ்ரீ சோமநாத சுவாமி திருக்கோயில் புதிதாக செய்யப்பட்ட வைரத் திருத்தேர் வெள்ளோட்டப்பெருவிழாவிசுவாவசு வருடம் மாசி மாதம் 10ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை கும்பாபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பிச்சை குருக்கள், அருணஸூந்தர குருக்கள், ராஜா பட்டர், விஜய சோமசேகர குருக்கள் ஆகியோரம் பங்கேற்றனர். தொடர்ச்சியாக மானாமதுரை சரகம் தேவஸ்தான கண்காணிப்பாளர் சீனிவாசன் மற்றும் பட்டர்கள் வேலாயுதம், சண்முகசுந்தரம், சோமசுந்தரம், சோமசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலையில், பக்தர்கள் புதிய தேரின் வடம் பிடித்து இழுத்தனர்.

முன்னதாக பல்வேறு தீபாரதனை, ஹோமம், யாகம்,பூஜைகள் மற்றும் ரத பிரதிஷ்டை உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக இத்திருக்கோவிலில் இரண்டு திருத்தேர்கள் கடந்த 65 ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருந்தது.மேலும் ஒரு திருத்தேரானது சுமார் 250 ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மானாமதுரை மற்றும் நாளை சுற்று வட்டார பகுதியில் உள்ள பக்த கோடி பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.







ஈரோடு மாவட்டம் துடுப்பதி விநாயகர் காமாட்சி அம்மன், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருக்கோவில் மற்றும் ஈரோடு செந்தாம்பாளையம் அருள்மிகு ஶ்ரீ சமயபுரம் மாரியம்மன் திருக்கோவில் விழா குழுவினர்களின் அழைப்பை ஏற்று மஹா கும்பாபிஷேக விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மண்டலத் தலைவரும் ஈரோடு மாவட்டச் செயலாளருமான சோழா எம்.ஆசைத்தம்பி கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பக்தர்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவை சிறப்பித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.